# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 324/மா/2023**
**நாள் : 14.11.2023**

திருவாளர்கள். B. விஜயகுமார் & M. விஜயன்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–13, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு B.விஜயகுமார் மற்றும் சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.விஜயன் ஆகியோரின் 26.11.2022 நாளிட்ட முறையீட்டு மனு 28.11.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 324/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு B.விஜயகுமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் ஆகியோர் தங்கள் முறையீட்டு மனுவில்:

"சென்னையில் பல்வேறு இடங்களில் அதிக எண்ணிக்கையிலான திரையரங்குகள் மற்றும் வணிக வளாகங்கள் செயல்படுகின்றன. இங்கு சிறுவர்களுக்கான விளையாட்டு அம்சங்கள், மகளிர், இளம் வயதினரை கவரும் வகையிலான பொழுதுபோக்கு மையங்களும் உள்ளன. இவற்றில் வாரத்தின் அனைத்து நாட்களிலும் ஷாப்பிங் மால்களில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. அதன்படி சென்னை வேளச்சேரி பிரதான சாலையில் கடந்த 2013ம் ஆண்டு முதல் பீனிக்ஸ் வணிக வளாகம் (Phoenix Market City) தோராயமாக 10 லட்சம் சதுர அடி பரப்பளவில், 14 மாடி தளத்துடன், 263 கடைகள் மற்றும் 11

திரையரங்குகளுடன் இயங்கி வருகிறது. தற்போது இந்த வணிக வளாகத்திற்கு ஒரே நேரத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் வரை வந்து செல்லும் சூழல் நிலவுகிறது. மக்கள் கூட்டம் மிக அதிகம் காணப்படும் இந்த மால் அமைந்துள்ள பகுதியில் போக்குவரத்து மேலாண்மைக்கான எந்த வசதியும் செய்யப்படவில்லை.

இந்த பீனிக்ஸ் மால் அமைந்துள்ள பகுதியில் சாலை விரிவாக்கம் என்பது பெரிய கேள்விக்குறியாக உள்ளது. இந்த வணிக வளாகத்திற்கு முதலில் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகள், நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்த கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் நிறைவேற்றாத நிலையில் கூடுதல் பகுதிகள் விரிவாக்கம் என்ற பெயரில் கட்டப்பட்டுள்ளது. CMDA மற்றும் மத்திய சுற்றுச்சூழல் துறை ஆகியவற்றின் ஒப்புதல்களிலும், கூடுதல் அனுமதியிலும் புதிய கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நிலத்தடி நீர் வளம் பாதுகாப்பு, நெரிசல் ஏற்படுத்துவதை தடுப்பது, நெரிசலால் ஏற்படும் தாக்கத்தை குறைக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுப்பது என பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இந்த நிபந்தனைகளையும் மேற்கண்ட பீனிக்ஸ் மால் நிறைவேற்றியதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த வணிக வளாகம் அமைந்துள்ள வேளச்சேரி பிரதான சாலை 45 மீட்டம் அகலம் என CMDA வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய நிலவரப்படி அங்கு 30 மீட்டர் அகலத்துக்கு தான் சாலை உள்ளது.

இந்த சாலையின் எதிர்கால விரிவாக்கத்தின் (சென்னை இரண்டாம் வளர்ச்சி திட்டம் - 2026) போது தேவைப்படும் நிலத்தை இந்த வணிக வளாகத்தை கட்டிய நிறுவனம் திட்ட அனுமதி பெறும்போது தானபத்திரம் மூலமாக வழங்கியது. ஆனால் ஆவண ரீதியாக ஒப்படைக்கப்பட்டாலும் அந்த நிலம் இன்னும் மேற்கண்ட பீனிக்ஸ் மால் வணிக வளாகத்தின் பயன்பாட்டிலேயே உள்ளது. அடுத்து சில ஆண்டுகளில் இங்கு சாலையின் அகலம் விரிவாக்கம் செய்யப்பட்டால் வணிக வளாகத்தின் நுழைவாயில் இருக்கும் இடத்தில் மிக பெரிய அளவுக்கு நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த வணிக வளாகத்தில் பிரதான முகப்பு, பின்புறம் என இரண்டு வழிகள் மட்டுமே வாயில்களாக உள்ளது. இந்த வாயில்களை ஒட்டி சில மீட்டர் தொலைவுக்கு மட்டுமே தனிப்பட்ட சாலை உள்ளது. அதில் இருந்து வாகனங்கள் பிரதான சாலைக்கு செல்வதற்கும், பிரதான சாலையில் இருந்து உள்ளே வருவதற்கும் போதிய இட வசதி ஏற்படுத்தப்படவில்லை. இதனால் நுழைவுப் பகுதி மற்றும் வெளியேறும் பகுதிகளில் வாகனங்கள் சில நிமிடங்கள் நின்று தான் உள்ளே செல்ல முடிகிறது. அது போன்று, வாடகை கார்கள், ஆட்டோக்களில் மக்கள் ஏற, இறங்க பொது சாலையை தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் அங்கு ஏற்படும் இந்த போக்குவரத்து நெரிசலில் இதற்கு சம்பந்தம் இல்லாத பல்வேறு பொது மக்களின் வாகனங்களும் இந்த போக்குவரத்து நெரிசலில் சிக்கி தாமதமாகின்றன. இது தொடர்பாக அரசும் பெருநகர சென்னை மாநகராட்சியும் தற்போதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்த புகார் தொடர்பாக மேற்கண்ட மண்டல அலுவலருக்கு நாள்:10.08.2022 எழுத்துப்பூர்வமான புகாரினை அளித்தும் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

எனவே உயர்திரு. ஐயா அவர்கள் மேற்கண்ட பீனிக்ஸ் மால் வணிக வளாகத்தில் திட்ட அனுமதியுடன் விதிக்கப்பட்ட அனைத்து கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை வணிக வளாகம் உடனே நிறைவேற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கவும், இதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படா வண்ணம் தகுந்த நடவடிக்கை எடுக்கவும், மேற்கண்ட வணிக வளாகம் கட்டுப்பாட்டில் உள்ள ஓ.எஸ்.ஆர். நிலத்தை (திறந்த வெளி ஒதுக்கீடு நிலம்) சென்னை பெருநகர மாநகராட்சியின் நிர்வாகத்தின்

கீழ் கொண்டு வர தகுந்த நடவடிக்கை எடுக்கவும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்."

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 01.02.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 15.03.2023 நாளிட்ட அறிக்கையில்** மனுதாரர் திரு. B. விஜயகுமார் அவர்கள் கோரியதற்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40A, கோட்டம் - 172 வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள Phoenix Market City 2013–ஆம் ஆண்டு முதல் வணிக வளாகத்திற்கு வாரத்தின் அனைத்து நாட்களிலும் பொதுமக்கள் வருவதாகவும் இது தொடர்பாக போக்குவரத்து மேலாண்மைக்கான எந்த வசதியும் Phoenix Market City-ல் செய்யப்படவில்லை என மனுதாரர் மூலம் கோரப்பட்டதற்கு வேளச்சேரி பிரதான சாலையில் மேற்படி வளாகத்தின் முன் சாலை விரிவாக்கம் செய்யும் பொருட்டு பேருந்து சாலை துறைக்கு (TNRIDC) கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த Phoenix Market City வணிக வளாகம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகள், நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி CMDA மூலம் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு கட்டப்பட்ட வணிக வளாகமாகும். மேலும் வேளச்சேரி பிரதான சாலை 45 மீட்டர் அகலம் என CMDA Master Plan வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய நிலவரப்படி வேளச்சேரி பிரதான சாலை 30 மீட்டர் அகலத்திற்கு மட்டுமே புழக்கத்தில் உள்ளது. அந்த சாலை ஓரத்தில் சாலை விரிவாக்கத்திற்காக தற்காலிகமாக வழங்கப்பட்ட மீதமுள்ள 15 மீட்டர் சாலையும் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

Phoenix வணிக வளாக நிறுவனத்தால் தானமாக வழங்கப்பட்ட திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் 6655.94 ச.மீ. பரப்பளவில் உள்ள இடம் பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவாக பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், இந்த பூங்காவிற்கு முன்பாக உள்ள 1206.39 ச.மீ. பரப்பளவு நிலம் பூங்காவிற்கு வரும் பொது மக்கள் வாகன நிறுத்தும் இடமாக உள்ளது.

மேற்கண்ட Phoenix Market City வணிக வளாகம் உரிமையாளர்கள் மூலம் வழங்கப்பட்ட திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் ஒரு பகுதி பூங்காவாகவும் மற்றும் முன்பகுதி நிலம் பூங்காவிற்கு வரும் பொதுமக்களின் வாகன நிறுத்தும் இடமாக பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டில் உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 31.10.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர்கள் 06.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள பீனிக்ஸ் மாலில் உள்ள திரையரங்கம் மற்றும் வணிக வளாகங்களுக்கு செல்லும் பொதுமக்கள், தாங்கள் வரும் வாகனத்தை சாலையிலேயே நிறுத்தி இறங்கிச் செல்வதாலும், திரையரங்கம் மற்றும் வணிக வளாகத்திலிருந்து வெளியே வரும் மக்கள், சாலையில் நிறுத்தப்பட்ட தங்களது வாகனத்தில் ஏறிச்செல்வதாலும், அங்கு பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு, பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். மேலும் மேற்கண்ட வணிக வளாகம், மாநகராட்சிக்கு திறந்த வெளியிடம் (OSR) ஒதுக்கியுள்ளது. ஆனால் அந்த இடத்தையும் பீனிக்ஸ் மால் நிறுவனம் வாகன நிறுத்த இடமாக பயன்படுத்துகிறது. இது தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களிடம் புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, மேற்கண்ட திறந்த வெளியிடத்தை மீட்கவும், அங்குள்ள சாலையில், வணிக வளாகத்திற்கு வருவோர் தங்களது வாகனத்தை நிறுத்தாமலிருக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்களது 26.11.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் செயற்பொறியாளர் அவர்கள் 6.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள பீனிக்ஸ் மால் மாநகராட்சிக்கு ஒதுக்கியிருந்த இடத்தில் தற்போது வாகனங்கள் எதையும் நிறுத்தவில்லை. மாலுக்கு வரும் பொதுமக்கள், மாலுக்கு உள்ளேயுள்ள வாகன நிறுத்தும் இடத்தில் ஏற்றி, இறக்கிச் செல்கின்றனர். தற்போது அங்கு போக்குவரத்து நெரிசல் ஏதுமில்லை.

மேலும், பீனிக்ஸ் மாலால் மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட சுமார் 50 ஆயிரம் சதுர அடி இடத்தில், மக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள பூங்கா அமைக்கப்பட்டிருந்தது. மேலும் பூங்காவிற்கு வரும் மக்களின் வாகனத்தை நிறுத்த வாகன நிறுத்தும் இடமாகவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. சென்ற ஆண்டுவரை பூங்காவை பீனிக்ஸ் மால் நிறுவனத்தினர் பராமரித்து வந்த நிலையில், கடந்த மே 2023 முதல் மாநகராட்சியாலேயே பராமரித்து வருகின்றனர் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பெருநகர மண்டல அலுவலர் 13 அவர்களின் 15.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மனுதாரர்களின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, வேளச்சேரி பிரதான சாலையில் அமைந்துள்ள பீனிக்ஸ் மாலில் உள்ள திரையரங்கம் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்து உள்ள இந்த மாலிற்கு போக்குவரத்திற்கான எந்தவித வசதியும் செய்யப்படவில்லையெனவும், இந்த வணிக நிறுவனத்தால் தானமாக வழங்கப்பட்ட திறந்தவெளி ஒதுக்கீடு இடம் அந்த நிறுவனத்தால் வாகன நிறுத்த இடமாக பயன்படுத்திவருகிறது என்றும், அதனால் அந்த சாலையில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர் என்றும் அதனால் திறந்தவெளியிடத்தை மீட்கவும், அங்குள்ள சாலையில் வணிக வளாகத்திற்கு வருவோர் தங்கள் வாகனத்தை நிறுத்தாமலிருக்கவும் கோரியுள்ளார்.

பீனிக்ஸ் மால் வணிக வளாகத்திற்கு CMDAவினால் சில நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது என்றும், வேளச்சேரி பிரதான சாலை 45 மீட்டர் எனவும், ஆனால் தற்போது அந்த சாலை 30 மீட்டர் அகலத்திற்கு மட்டும் புழக்கத்தில் உள்ளது என்றும், அச்சாலை ஓரத்தில், சாலை விரிவாக்கத்திற்காக தற்காலிகமாக வழங்கப்பட்ட மீதமுள்ள 15 மீட்டர் சாலையும் பொதுமக்கள் பயன்பாட்டிலேயே உள்ளது என்றும், மேலும் மேற்குறிப்பிட்ட வணிக வளாகத்தால் தானமாக வழங்கப்பட்ட 6655.94 ச.மீ. திறந்தவெளி இடம் மாநகராட்சி பூங்காவாக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்றும், இப்பூங்காவிற்கு முன்பாக உள்ள 1206.39 ச.மீ., பூங்காவிற்கு வரும் பொதுமக்கள் வாகன நிறுத்துமிடமாகவுள்ளது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், பீனிக்ஸ் மாலால் மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட சுமார் 50 ஆயிரம் சதுர அடி மக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்கு பூங்காவாகவும், இப்பூங்காவிற்கு வரும் பொதுமக்கள் தங்கள் வாகனத்தை நிறுத்தும் இடமாகவும் இருந்து வருகிறது என்றும், சென்ற ஆண்டு வரை பூங்காவை பீனிக்ஸ் மால் நிறுவனத்தால் பராமரித்து வந்த நிலையில் கடந்த மே 2023 முதல் மாநகராட்சியாலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ல் வேளச்சேரி பிரதான சாலையில் 2013-ஆண்டு முதல் செயல்பட்டு வரும் பீனிக்ஸ் மாலால் தானமாக வழங்கப்பட்ட திறந்தவெளி இடம், மனுதாரர் 2022-ஆம் ஆண்டு புகார் மனு அளித்த பின்னர் தான், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பீனிக்ஸ் மால் அளித்த சுமார் 50 ஆயிரம் சதுர அடி நடைபயிற்சி பூங்காவாகவும், அப்பூங்காவிற்கு வரும் பொதுமக்கள் தங்கள் வாகனத்தை நிறுத்துமிடமாகவும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியால் அப்பூங்கா பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது அறியமுடிகிறது. மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ள திறந்தவெளி இடத்தை மாநகராட்சி தனது கட்டுப்பாட்டில் வைக்காதது வருத்தத்திற்குரியது. இருப்பினும், பீனிக்ஸ் மாலால் தானமாக வழங்கப்பட்ட இடத்தை பிற்காலத்தில் அந்நிறுவனமோ அல்லது வெளியாட்களோ அதனை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் சார்பாக "சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது" என்ற பெயர்ப் பலகை வைக்கவும், அவ்வப்போது அந்த இடத்தை கள ஆய்வு செய்து மேற்படி வணிக வளாகம் அருகில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படாமல்

இருப்பதை உறுதி செய்திடுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) திரு. M. விஜயன்,
3/13, 4–வது தெரு,
கருணாநிதி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

3) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) மண்டல அலுவலர்,
மண்டலம் – 13, பெருநகர சென்னை மாநகராட்சி,
115, Dr. முத்துலஷ்மி சாலை, அடையார், சென்னை – 600 020.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்